



https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

16th JUNE 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 84



# ஜனாதிபதியின் ஆயுட் காலம் ஒரு வருடத்துக்கு நீடிப்பு!!!

## -அரசு தீவிர முயற்சி-

சர்வஜன வாக்கெடுப்பின்றி நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஊடாக ஜனாதிபதி பதவியை ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்கு அரசு தீவிரமாக முயற்சி செய்து வருகிறது என்று ஜனாதிபதி வட்டாரத்தின் ஊடாக அறிய முடிகிறது.

இது தொடர்பாக அரசு சட்ட வல்லுனர்களுடன் ஆராய்ந்து வருகிறது என்று அந்தத் தகவல் மேலும் தெரிவிக்கிறது.

முதலில் சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக இரண்டு வருடங்களுக்கு தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது. அதற்கு அனைவரினதும் எதிர்ப்பு கிளம்பியதால் அந்த முயற்சியை கைவிட்டுவிட்டு நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியின்

02

# ஜனாதிபதி ஆயுட்காலம் நீடிப்பு: மொட்டு கட்சி எதிர்ப்பு

ஜனாதிபதியின் ஆயுட்காலத்தை நாடாளுமன்றத்தின் ஊடாக ஒரு வருடத்துக்கு நீடிக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி தரப்பு ஈடுபட்டால் அதற்கு மொட்டு கட்சி ஆதரவு வழங்காது என்று மொட்டு கட்சியின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

02

# ரணில் அரசின் பொது வேட்பாளர்:

## இராஜாங்க அமைச்சர்கள் ஒரே நிலைப்பாட்டில்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அரசின் பொது வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே நிறுத்தப்பட வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர்கள் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளனர்.

இந்த நிலைப்பாட்டை அவர்கள் மொட்டு கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவிடம் தெரிவித்துள்ளனர்.இந்த நிலைப்பாட்டின் மூலம் மொட்டு கட்சிக்குள் பிளவு ஏற்படாது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை,மொட்டு கட்சி தனியான வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று அக்கட்சிக்குள் சிலர் கூறி வருகின்றனர். சிலர் நாமல் ராஜபக்சவை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று கூறுகின்றனர்.

# 40 எம்பிக்கள் கட்சி தாவல்

அரசு மற்றும் எதிர்க்கட்சியில் உள்ள எம்பிக்கள் கட்சி தாவலுக்குத் தயாராகி வருகின்றனர் என்று அறிய முடிகிறது.

அதன்படி,அரசில் அங்கம் வகிக்கும் எம்பிக்கள் சஜித் தரப்பு மற்றும் ஜேவிபி ஆகிய எதிர்கட்சிகளுக்கும் சஜித் தரப்பில் உள்ள எம்பிக்கள் அரசு பக்கமும் தாவுவதற்குத் தயாராகி வருகின்றனர்.

இது தொடர்பிலான பேச்சுக்கள் நிறைவடைந்துவிட்டன என்றும் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் கட்சி தாவல் இடம்பெறும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன






உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும்
இச்சேவையில் பங்கு பற்றி
விரைவில் கும்பாபிஷேகம் செய்து
பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்
ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ. ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
+94 772288166 +94 112433325
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13
E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk
ISKCON SRI LANKA

புது சுடர்
www.puthusudar.lk
2024 JUNE 16 - SUNDAY

# தோல்வியைத் தடுக்க ரணில் படும்பாடு

ஜனாதிபதி தேர்தல் நெருங்க நெருங்க அந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் ஒருபுறமும் அதை ஒத்திப்போடுவதற்கான ஏற்பாடுகள் இன்னொரு புறமும் என இரண்டு வகையான செயற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

கூட்டணி அமைத்தல்,ஏனைய கட்சி எம்பிக்களுக்கு வலைவீசுதல்,மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளிவீசுதல் மற்றும் கூட்டங்களை நடத்துதல் என அரசின் தேர்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதை செய்துகொண்டே, தேர்தலை ஒத்திப்போடுவதற்கான தந்திரோபாய நகர்வுகளை ரணிலுக்கே உரிய பாணியில் செய்து வருகிறார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கேபண்டா இது தொடர்பில் முதல் குண்டைத் தூக்கிப்போட்டார்.

இரண்டு வருடங்களுக்கு தேர்தலை ஒத்திப்போடுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று அவர் யோசனை ஒன்றை முன்வைத்தார்.

அந்த யோசனை எடுபடவில்லை. அனைவரும் எதிர்க்கத் தொடங்கினர். மொட்டு கட்சிகூட இதற்கு ஆதரவில்லை.

இதனால் அது அப்படியே அடங்கிப்போனது.

இருந்தும், ஒத்திப்போடல் முயற்சியை ஜனாதிபதி கைவிடவில்லை.இன்னொரு முயற்சியை ரணில் மேற்கொண்டுள்ளார்.

அதுதான் சர்வஜன வாக்கெடுப்பின்றி நாடாளுமன்றத்தின் ஊடாக ஒரு வருடத்துக்கு ஜனாதிபதியின் ஆயுட்காலத்தை நீடித்தல்.

6 வருடங்களாக இருந்த ஜனாதிபதியின் ஆயுட்காலம் 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக 5 வருடங்களாக குறைக்கப்பட்டது.

குறைக்கப்பட்ட அந்த ஒரு வருடத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும் என்று சில சட்ட வல்லுநர்கள் ரணிலுக்கு ஆலோசனை வழங்க,இப்போது அந்த ஒரு வருடத்தை இணைத்துக்கொண்டு ஒரு வருடத்துக்கு ஜனாதிபதியின் ஆயுட்காலத்தை நீடித்து தேர்தலை ஒரு வருடத்துக்கு ஒத்திப்போடும் வேளையில் ஜனாதிபதி இறங்கியுள்ளார்.

ஆனால், இந்த முயற்சிக்கும் மொட்டு கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. தேர்தல் ஒத்திப்போடப்படக்கூடாது .உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதே மொட்டு கட்சியின் நிலைப்பாடு என்று பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

மொட்டு கட்சியின் ஆதரவு இல்லாமல் ரணிலால் நாடாளுமன்றில் எந்தவொரு பிரேரணையையும் சட்ட மூலத்தையும் நிறைவேற்ற முடியாது.இந்த நிலையில்,தேர்தலை ஒத்திப்போடும் ரணிலின் இந்த முயற்சியும் வெற்றிபெறப் போவதில்லை என்று சொல்லலாம்..

ஜனாதிபதி தேர்தலை எந்தவகையிலும்,ஒத்திப்போட முடியாது என்று அரசமைப்பு கூறும்போது,பெரும் ஜனநாயகவாதியாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் ரணில் விக்ரமசிங்க எதற்காக சட்டத்தையும் மீறி– ஜனநாயத்தையும் மீறி தேர்தலை ஒத்திப்போடுவதற்கு முயற்சி செய்கிறார் என்ற கேள்வி எழுகிறது.

இந்தக் கேள்விக்கு அரச தரப்பில் பல தரப்பட்ட பதில்களும் விளக்கங்களும் கூறப்பட்டாலும் கூட,தேர்தலை ஒத்திப்போடுவதற்கான உண்மையான காரணம் தோல்வி பயமே அன்றி வேறில்லை என்பதுதான் உண்மை.

வெல்ல முடியும் என்றால் ஒருபோதும் எந்த ஆட்சியாளர்களும் தேர்தலை ஒத்திப்போட விரும்பமாட்டார்கள்.இப்போதைய ஜனாதிபதியை நியமித்தது மக்கள் அல்ல.நாடாளுமன்ற உறுப்பினர்கள் .அதாவது,மொட்டு கட்சி உறுப்பினர்கள். கோத்தாவின் மிகுதி காலத்தைத்தான் ரணில் பாரமேற்றுள்ளார்.

ரணிலை மக்கள் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் முற்றாக நிராகரித்துவிட்டார்கள். கோத்தா ஜனாதிபதி பதவியை விட்டு ஓடியதும் அந்த இடத்தை நிரப்புவதற்கு வேறு எவரும் மொட்டு கட்சிக்கு கிடைக்காததால் ரணிலை அவர்கள் ஜனாதிபதியாக்கினர்.

அன்றைய சூழலில் மக்களிடமிருந்து ராஜபக்ச குடும்பம்–மொட்டு கட்சி பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியது. அந்த ஆபத்தில் இருந்து இவர்களை காப்பாற்றுவதற்கு ரணில்தான் பொருத்தமானவர் என்று ராஜபக்ச குடும்பம் அடையாளம் கண்டதால் ரணிலை ஜனாதிபதியாக்கினர்.

எந்த நோக்கத்துக்காக ரணில் நியமிக்கப்பட்டாரோ அந்த நோக்கத்தை சரியாக நிறைவேற்றியுள்ளார்.ராஜபக்ச குடும்பத்தின் பாதுகாப்பு முற்றாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ரணில் ஜனாதிபதியாகி மின் வெட்டையும் எரிபொருள் வரிசையையும் நீக்கியுள்ளார். ஆனால்,பொருளாதார பிரச்சினை கூடியுள்ளது.

அவர் வந்த பின்தான் மின் கட்டணம் உட்பட பல கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன்ன.புது புது வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.விலைவாசி அதிகரித்தது..

ஆனால்,பொருளாதாரத்தை சரி செய்துவிட்டோம் என்று அரசு கூறித் திரிகிறது.ஆனால்,அடிமட்டத்தில் நிலைமை வேறு.மக்களுக்கு தொடர்ந்து பிரச்சினைதான்.

இதன் காரணமாக மக்கள் இந்த அரசை கவிழ்ப்பதற்குத் தயாராகி வருகின்றனர் என்ற புலனாய்வு அறிக்கை ஜனாதிபதியிடம் சென்றுவிட்டது.இதனால்தான் தேர்தலை ஒத்திப்போட்டு இன்னும் சிறிது காலம் ஜனாதிபதி பதவியை அனுபவித்துவிட்டுப் போவதாற்கு ரணில் விக்ரமசிங்க முற்படுகிறார்.

ஆகவே, தேர்தலை ஒத்திப்போடுவதற்கு ஜனாதிபதி முயற்சி செய்வதன் நோக்கம் தோல்வி பயம்தான் என்பதில் சந்தேகமில்லை.

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களாக குறைக்கப்பட்ட ஜனாதிபதியின் ஆயுட் காலத்தை மீண்டும் 6 வருடங்களாக நிர்ணயிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அறிய முடிகிறது. அந்த செயற்பாட்டுக்கு நாம் ஆதரவு வழங்கமாட்டோம் என்று கூறியுள்ளார்.

மேலும்,தாம் தேர்தலை ஒத்திப்போடும் நிலைப்பாட்டுக்கு எதிராகவுள்ளோம் என்றும் உரிய நேரத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## ஜனாதிபதியின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆயுட் காலத்தை ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்கு முயற்சி எடுத்து வருகிறது.

19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் ஆயுட்காலம் 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களுக்கு குறைக்கப்பட்டது. அந்த ஒரு வருடத்தை இப்போது நீடிக்கலாம் என்று சில சட்ட வல்லுநர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்தே மேற்படி நீட்டிப்பு தொடர்பில் ஜனாதிபதி தரப்பு களத்தில் இறங்கியுள்ளது.









**ஜேவிபி தலைவர் அனுரகுமாரவின் வெற்றியைத் தடுப்பதற்காக சஜித்தையும் ரணிலையும் இணைப்பதற்கு ரணில் தரப்பு முற்பட்டாலும் அந்த இணைவால் அனுரவை விடவும் அதிகம் பாதிக்கப்படப் போவது சஜித் பிரேமதாஸாதான். ரணிலின் எதிரி அனுர அல்ல சஜித்.**



# ரணிலுக்கு முட்டுக் கொடுப்பாரா சஜித்?

ஜனாதிபதி தேர்தல் நெருங்குகிறது. அந்தத் தேர்தலில் எப்படியாவது வெற்றிபெற வேண்டும் என்ற முனைப்பில் உள்ளார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

தனித்து நின்று வெல்லும் அளவுக்கு ஜனாதிபதியின் செல்வாக்கு இல்லை. செல்வாக்கு இருப்பது எதிர்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஜேவிபிக்கும்தான்.

இந்தக் கட்சியில் ஒன்றை வளைத்துப் போட்டால்தான் வெற்றி பெற முடியும்.ஜேவிபியை வளைப்பதென்பது என்றுமே நடக்காத காரியம்.

ஐக்கிய மக்கள் சக்தியை வேண்டுமானால் கொஞ்சம் முயற்சி செய்து பார்க்கலாம்.ஆனால்,அதுவும் இலகுவில் நடக்கும் காரியம் அல்ல.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் இருந்துகொண்டு ரணிலுக்காக வேலை செய்யும் ஒருசிலர் மாத்திரமே ரணிலையும் சஜித்தையும் இணைக்கும் திட்டத்தில் உள்ளார்கள். அதற்கான முயற்சியிலும் இறங்கியுள்ளார்கள்.

2019 ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய மொட்டு கட்சியின் வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிடுவதென்றால் அது ரணிலால் முடியாது.சஜித்தாலேயே முடியும் என்று மக்கள் கருதியதால் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் சஜித் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

கோத்தா 69 லட்சம் வாக்குகளை பெற்று வெற்றிபெற்றபோதிலும்,சஜீத்தால் 55 லட்சம் வாக்குகளையேனும் பெற முடிந்தமை அன்றைய காலகட்டத்தில் பெரிய விடயம் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் அந்த எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

இத்தருணத்தில் சஜித் ரணிலுடன் இணைந்து அந்த வெற்றியை அநியாயமாக இழப்பாரா?

ஜேவிபி தலைவர் அனுரகுமாரவின் வெற்றியைத் தடுப்பதற்காக சஜித்தையும் ரணிலையும் இணைப்பதற்கு ரணில் தரப்பு முற்பட்டாலும் அந்த இணைவால் அனுரவை விடவும் அதிகம் பாதிக்கப்படப்போவது சஜித் பிரேமதாஸாதான்.ரணிலின் எதிரி அனுர அல்ல சஜித்.

சஜித் இணைந்தால் சஜித்துக்கு என்ன நடக்கும் என்று எல்லோருக்கும் தெரியும்.சஜித்தை அருகில் எடுத்து அப்படியே அழித்துவிடுவார் ரணில்.

தன்னை ஜனாதிபதியாக்கிய மொட்டு கட்சிக்கு அவர் செய்வதைப் பாருங்கள். அந்தக் கட்சியை இரண்டு,மூன்று துண்டுகளாக உடைத்துவிட்டார். அதில் பெரிய துண்டை தன்னோடு இணைத்துக்கொள்வதற்குத் திட்டமிட்டுதான் மொட்டு கட்சியின் நிமால் லான்ஸாவை வைத்து கூட்டணி ஒன்றை உருவாக்கி வருகிறார் ரணில்.

மொட்டில் இருந்து எப்படியும் 40 பேரை இழுத்தெடுப்பேன் என்று ரணிலுக்கு வாக்குறுதியளித்துள்ளார் லான்ஸா.இதில் லான்ஸாவும் பிரசன்ன ரணதுங்கவும் தீவிரமாக இறங்கியுள்ளார்கள்.

இப்படி தன்னை ஜனாதிபதியாக்கிய கட்சிக்கே துரோகம் செய்யும் ரணில் ,தன்னை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோற்கடித்த சஜித்தை மாத்திரம் விட்டுவைப்பாரா?

சஜித்தின் வளர்ச்சி ரணிலுக்கு என்றுமே ஆபத்துதான்.இதனால் சஜித்தை அருகில் எடுத்து அழிப்பதுதான் ரணிலின் திட்டம்.

இந்தத் திட்டத்துக்கு சஜித் என்றுமே துணைபோகமாட்டார்.தனது கழுத்தை அறுக்கும் கத்தியை அவரே தீட்டிக் கொடுப்பாரா?

இன்று உண்மையில் போட்டி நிலவுவது சஜித்துக்கும் அனுரவுக்கும் இடையில்தான்.ரணில் போட்டியில் இருந்து வெகுதூரத்தில் உள்ளார்.

அனுரவை வீழ்த்தினால் சஜித் ஜனாதிபதியாவார்.தோற்றால் எதிர்கட்சித் தலைவராக இருப்பார். ரணிலுடன் சேர்ந்தால் ரணிலை ஜனாதிபதியாக்கிவிட்டு அதிகாரமற்ற ஒரு பிரதமராக இருந்துவிட்டுப் போவார் சஜித்.

அரசியல் சூழல் இப்படி இருக்கும்போது எந்தவோர் இலாபமும் இல்லாமல் வெறுமனே ரணிலுக்கு முட்டுக்கொடுப்பாரா சஜித்?



# யாத்ரீகர்களுக்கு சவூதி அரேபியாவின் சேவைகள்

சவூதி அரேபிய இராச்சியம், அதன் நிறுவனர் மன்னர் அப்துல்அசீஸ் பின் அப்துல் ரஹ்மான் ஆல் சஊத் அவர்களது காலத்திலிருந்து, இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் அவர்களின் காலம் வரை, அதிக எண்ணிக்கையிலான ஹஜ் மற்றும் உம்ரா யாத்ரீகர்களுக்கு இடமளிக்கும் வகையில் இரண்டு புனிதத் தலங்கள் மற்றும் மற்ற புனித இடங்களை விரிவுபடுத்தி, அங்குள்ள வசதிகளை மேம்படுத்தவும், நவீன சேவைகளை வழங்கவும் தொடர்ந்து மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருகிறது.

யாத்ரீகர்களுக்கு சேவை செய்வது என்பது சவூதி அரேபிய இராச்சியத்தின் தலைமைத்துவத்தின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாகும். சவூதி அரேபியாவின் அனைத்து மன்னர்களும் இதை தமக்குக் கிடைத்த சிறப்பாகக் கருதி வருகின்றனர்.

சவூதி அரேபிய இராச்சியம், அதன் தலைமையின் வழிகாட்டுதலின் கீழ், அதிகரித்து வரும் ஹஜ் மற்றும் உம்ரா யாத்ரீகர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய, இரண்டு புனிதத் தலங்களின் விரிவாக்கத் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ், புனிதத் தலங்களின் பரப்பளவை அதிகரித்து, உள்கட்டமைப்பை மேம்படுத்தி, நவீன வசதிகள் மற்றும் மேம்பட்ட போக்குவரத்து அமைப்புகளை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இது யாத்ரீகர்களின் நடமாட்டத்தை எளிதாக்குவதோடு, அவர்களின் வசதிகளையும் உறுதி செய்கிறது.

பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரியுமான இளவரசர் முகமது பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் அறிவித்த "விஷன் 2030" யின் கீழ், சவூதி அரேபியா இறைவனின் விருந்தினர்களுக்கு சேவை செய்ய பல திட்டங்களை வடிவமைத்துள்ளது.

அதில் முக்கியமானது "கடவுளின் விருந்தாளிகள்" திட்டம். இந்த திட்டம், ஹஜ் மற்றும் உம்ரா யாத்ரீகர்களின் அனுபவங்களின் தரத்தை மேம்படுத்துவதையும், அவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்தி வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது, இதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் இந்த சேவைகளின் பயனைப் பெற முடியும்.

நவீன தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் மூலம் ஹஜ் மற்றும் உம்ரா யாத்ரீகர்களுக்கு அதி சிறந்த சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட பல முயற்சிகளை இந்த "விஷன் 2030" உள்ளடக்கியுள்ளது.

திறன்பேசிகளின் பயன்பாடுகளைப் பயன்படுத்தி, யாத்ரீகர்கள் கிரியைகள் மற்றும் கிடைக்கக்கூடிய சேவைகள் பற்றிய துல்லியமான மற்றும் நிகழ்நேர தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும், மின்னணு ஹஜ் மற்றும் உம்ரா விசா வழங்குதல் மற்றும் ஹஜ் மற்றும் உம்ரா நடைமுறைகளை நெறிப்படுத்த மின்னணு முன்பதிவு முறையை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

உயர்மட்ட பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதன் மூலம் யாத்ரீகர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சவூதி அரேபிய இராச்சியம் அதிக முன்னுரிமை அளிக்கிறது. மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மையங்கள் என்பன அதிநவீன உபகரணங்களுடன் தயார்படுத்தப்பட்டுள்ளன.

அவ்வாறே, எந்தவொரு அவசரநிலையையும் கையாளத் தயாராக பயிற்சி பெற்ற மருத்துவக் குழுக்களுடன் பணியாளர்கள் உள்ளனர். மேலும் , யாத்ரீகர்களைப் பாதுகாக்கவும், கிரியைகள் சீராகவும் பாதுகாப்பாகவும் நடைபெறுவதை உறுதிசெய்ய பாதுகாப்புக் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

புனித தலைநகரின் நகர சபை, 2024 ஆம் ஆண்டிற்கான ஹஜ் திட்டத்தை தயாரித்துள்ளது, இது 11,800 ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களால் செயல்படுத்தப்படுகிறது. அவர்கள் புனிதப் பிரதேசங்கள் முழுவதும் 28 நகராட்சி சேவை மையங்களை நிறுவியுள்ளனர்.

இந்த மையங்கள் 24*7 செயல்படும் மற்றும் தேவையான மனிதவளம் மற்றும் தளவாட ஆதரவுடன் முழுமையாகத் தயார்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே, அவசரகால சூழ்நிலைகளைக் கையாள மத்திய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சந்தைகள், உணவுக் கடைகள், உணவகங்கள் மற்றும் தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேற்பார்வையிட பல்வேறு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில் , சுகாதார அமைச்சகம் 16 மருத்துவமனைகள் மற்றும் 123 சுகாதார மையங்களையும், மக்கா மற்றும் புனித தளங்களில் 5 பருவகால சுகாதார மையங்களையும் தயார் செய்துள்ளது.

இம்மையங்களுக்கு, அஜ்யாத் அவசர மருத்துவமனை, அல்-ஹராம் மருத்துவமனை மற்றும் மக்காவில் உள்ள புனித மசூதியின் தாழ்வாரத்தில் அமைந்துள்ள 3 சுகாதார மையங்கள் மற்றும் மக்காவில் உள்ள புனித மசூதியின் மையப் பகுதிக்கு அருகிலுள்ள இரண்டு சுகாதார மையங்கள் தேவையான உதவிகளை வழங்கி வருகிறது.

அவசரகால நிலைமைகளைப் பொறுத்தவரையில், நிம்ரா பள்ளி , அராஃபத்தின் ஜபல் அல்-ரஹ்மா மற்றும் மினாவில் உள்ள ஜமாரத் பகுதி ஆகியவற்றில் 33 துணை ஆம்புலன்ஸ் குழுக்களுடன் 155 உயர் வசதிகள் கொண்ட ஆம்புலன்ஸ்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்படுகள் யாத்ரீகர்களுக்கு சேவை செய்ய 24*7 தயார் நிலையில் இருக்கும்.





யாத்ரீகர்களின் போக்குவரத்தை கண்காணிக்கும் உச்ச ஆணையம், இறைவனின் விருந்தினர்களை ஏற்றிச் செல்ல 3,500 பேருந்துகளை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த பேருந்துகள் ஹஜ் பருவ காலத்தில் 12 மில்லியன் பயணங்களை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது "மஸ்ஜித் அல்ஹரம்" ஐச் சுற்றியுள்ள ஒன்பது நிலையங்கள் வழியாக போக்குவரத்துச் சேவைகளை வழங்குகிறது. "அய்யாமுத் தஷ்ரீக்" நாட்களில் மினாவிற்கும் "மஸ்ஜித் அல்ஹரம்" இற்கும் இடையில் யாத்ரீகர்கள் செல்வதற்கு வசதியாக 12 வழிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சவூதி உணவு மற்றும் மருந்து ஆணையத்தைப் பொறுத்தவரையில், அது தற்போதைய ஹஜ் பருவ காலத்தில் யாத்ரீகர்களின் உணவு, மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விரிவான திட்டத்தை தயாரித்துள்ளது.

இந்த ஹஜ் பருவ காலத்தின் முன்முயற்சிகளின் ஒரு பகுதியாக, மஸ்ஜித் அல்ஹரம் மற்றும் நபிகள் நாயகத்தின் மதீனாப் பள்ளிகளுக்கான மத விவகாரங்களை தலைமையகம் "மனிதாபிமானம்" என்ற ஒரு முன்முயற்சியைத் தொடங்கியுள்ளது.

இறைவனின் விருந்தினர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை மனிதாபிமானமாக்குவதன் மூலம் அவர்களின் அனுபவத்தை வளப்படுத்துவதே இதன் நோக்கமாகும். யாத்ரீகர்களில் நோயுற்றோர், முதியோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரைப் பராமரித்தல், அவர்களுக்குப் பொருத்தமான வழிபாட்டுச் சூழலை உருவாக்குதல் ஆகியவை இதில் உள்ளடங்கும்.

சவூதி உள்துறை அமைச்சகம், இறைவனின் விருந்தினர்களுக்கு உதவுவதற்கான பல முன்முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதில், ஹிஜ்ரி 1445 ஆம் ஆண்டிற்கான ஹஜ் விசாவில் சவூதி அரேபியாவுக்குள் வருபவர்களுக்கான டிஜிட்டல் அடையாள சேவை மிகவும் முக்கியமானது. சவூதி அரேபிய இறைச்சியத்தின் "விஷன் 2030" இன் இலக்குகளுடன் இணங்கி, மனிதகுலத்திற்கு சேவை செய்ய, டிஜிட்டல் மாற்றம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த முன்முயற்சி உள்ளது.

இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத், 88 நாடுகளைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்கிய 2,300 யாத்ரீகர்களை தனது விருந்தினர்களாக அழைக்க உத்தரவிட்டுள்ளார்.

இதில் 1,000 யாத்ரீகர்கள் தியாகிகள், கைதிகள், காயமடைந்த பாலஸ்தீனியர்களின் குடும்பங்களையும், சவூதி அரேபியாவில் பிரிக்கப்பட்ட சியாமி இரட்டையர்களின் குடும்பங்களையும் சேர்ந்த 22 யாத்ரீகர்களையும் உள்ளடக்கியுள்ளனர். இது ஹஜ் மற்றும் உம்ராவுக்கான இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலரின் விருந்தினர்களுக்கான நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகும்.

இறுதியாக, இறைவனுடைய புனித பள்ளிவாயில்களின் யாத்ரீகர்களின் வசதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு சவூதி அரேபிய இராச்சியம் மேற்கொண்டு வரும் விரிவான திட்டங்கள் மற்றும் நவீன முன்னேற்றங்கள் அதன் அர்ப்பணிப்பை தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரியுமான இளவரசர் முகமது பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் ஆகியோருக்கு சிறந்த வெகுமதிகளை இறைவன் வழங்க பிரார்த்திக்கின்றோம். அவ்வாறே, சவூதி அரேபியா பாதுகாப்பும் செழிப்பும் நிரம்பி, இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் கலங்கரை விளக்கமாக நீடிக்கவும் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி**



# ரிட்ஸ்பரி சேர் ஜோன் டார்பட் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்




தொடர்ச்சியான 12ஆவது வருடமாக ரிட்ஸ்பரி சேர் ஜோன் டார்பட் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் 2024 போட்டிகளுக்கு ரிட்ஸ்பரி அனுசரணை வழங்கியிருந்தது.

இதனூடாகஇ நாடு முழுவதையும் சேர்ந்த 1000க்கும் அதிகமான பாடசாலைகளின் 20இ000 க்கும் அதிகமான திறமைசாலிகள் வெளிக்கொண்டுவருவதனூடாகஇ இளம் எதிர்பார்ப்புகள் நிறைந்த மெய்வல்லுநர்களை இனங்கண்டு ஆதரவளிப்பதில் வர்த்தக நாமம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு மீள உறுதி செய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் விளையாட்டு வரலாற்றில் மிகவும் பழமையான பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகளாக அமைந்திருக்கும் இந்தப் போட்டித் தொடர் ஆரம்பம் பற்றி அறிவிக்கும் மாநாடு கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் 2024 ஜ/ன் 10 ஆம் திகதி நடைபெற்றது.

இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சம்மேளனத்துடன் (ளுடுளுயுயு) ரிட்ஸ்பரி இணைந்துஇ இந்த சம்பியன்ஷி ிப் போட்டிகளை முன்னெடுக்க முன்வந்திருந்ததுடன்இ கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுஇ முன்னெடுக்கப்படும்.

53 ஆவது ரிட்ஸ்பரி சேர் ஜோன் டாபர்ட் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகளில் 11இ 12இ 13இ 14 மற்றும் 15 வயதுக்குட்பட்ட பிரிவுகள் அடங்கியிருக்கும். யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இரு புதிய போட்டிகள் முன்னெடுக்கப்படும். அதனூடாக பிராந்திய மட்டத்தில் காணப்படும் இளம் மெய்வல்லுநர்களுக்கு மேலும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



# நீண்டகால பேண்தகைமைக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களை நாட வேண்டிய நிலையில் இலங்கை

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தொழில்துறை வளர்ச்சி மற்றும் நவீன சமுதாயத்தின் அடிப்படை வலு ஆதாரமாகத் திகழும் புதைபடிவ எரிபொருட்கள்இ சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார செலவீனம் போன்ற காரணங்களுக்காக வீழ்ச்சி கண்டு வருகின்றன. புதைபடிவ எரிபொருட்கள் பச்சைவீட்டு வாயுக்களை வெளியிடுகின்றன.

இது வெப்பத்தை சிக்க வைக்கிறதுஇ இது புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு வழிவகுக்கிறதுஇ மேலும் காற்று மாசுபாட்டை அதிகரிக்கிறது.

நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் நிலக்கரி சாம்பலை உற்பத்தி செய்கின்றன. அவை சரியாக கையாளப்படாவிட்டால் மண் மற்றும் நிலத்தடி நீரை மாசுபடுத்தும். மேலும் புதைபடிவ எரிபொருள் மின் உற்பத்தி நிலையங்களுக்கு கணிசமான அளவு நீர் தேவைப்படுவதுடன்இ அவை உள்ளூர் நீர் ஆதாரங்களில் அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடியன.

காற்று மற்றும் நீர் மாசுபாட்டின் காரணமாக இவற்றுக்கு அதிகரித்த சுகாதார செலவீனமும் அதன் காரணமான சமூக செலவீனமும் உள்ளது. மாசுபாட்டுடன் தொடர்புடைய பல உடல்நலப் பிரச்சனைகள் அதிகரித்த மருத்துவச் செலவுகள், உற்பத்தித்திறன் இழப்பு மற்றும் அகால மரணம் என இவற்றினால் ஏற்படும் இழப்பு மிகவும் அதிகமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஆய்வின்படிஇ புதைபடிவ எரிபொருள் சார்ந்த காற்று மாசுபாட்டின் உலகளாவிய சுகாதார செலவுகள் ஆண்டுதோறும் டிரில்லியன் கணக்கான டொலர்கள் ஆகும்.



# யூனிலீவர் ஹொரணை தொழிற்சாலையில் சூரிய மின்சக்தி

யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனம் தனது ஹொரணை தொழிற்சாலையில் புதிய 2.33 மெகாவோற் சூரிய மின்சக்தித் திட்டத்தை அண்மையில் ஆரம்பித்து வைத்தது.

இந்த திட்டத்தை Abans Electricals PLC நிறுவனத்துடன் இணைந்து அது முன்னெடுத்திருந்தது. யூனிலீவரின் நிலைபேறான தன்மை மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான அர்ப்பணிப்பிற்கான இந்த முக்கிய திட்டம், மொத்தமாக 1.3 மில்லியன் யூரோ முதலீட்டைக் கொண்டுள்ளது.

யூனிலீவரின் உலகளாவிய காலநிலை மாற்றத்தை தணிக்கும் நடவடிக்கைத் திட்டத்துடன் (CTAP) இத்திட்டம் இணைந்துள்ளது. 2030ஆம் ஆண்டளவில் நாட்டின் மின்சார விநியோகத்தை புதுப்பிக்கத்தக்க மூலங்களில் இருந்து பெறுவதனை நோக்கி மாறுவதற்கானஇ இலங்கையின் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் இலட்சிய இலக்குகளுக்கு பங்களிப்புச் செய்கிறது.

யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் தலைவரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அலி தாரிக் இது பற்றி தெரிவிக்கையில், “இந்த சூரிய மின்சக்தி திட்டத்தை ஆரம்பித்து வைப்பதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்.

நிலைபேறான நடைமுறைகள் மூலம் எமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான மற்றுமொரு முதலீடு இதுவாகும். இதுஇ தரமான பொருட்கள் மற்றும் வர்த்தகநாமங்களை மட்டும் உற்பத்தி செய்வதை மாத்திரம் கொண்டதல்ல. நிலைபேறான வாழ்க்கையை அனைவருக்கும் பொதுவானதாக மாற்றும் எமது உலகளாவிய தூரநோக்கத்திற்கு அமையஇ நாம் மேற்கொள்ளும் அனைத்து விடயங்களிலும் ஒரு பொறுப்புள்ள பெருநிறுவனமாக செயற்படுவதையும் உறுதி செய்கிறோம் - என்றார்.

# மூன்று மகுடத்துடன் ஜொலிக்கும் ஹல்கொல்ல எஸ்டேட்



Kelani Valley Plantationsஇன் (KVPL) துணை நிறுவனமான ர்யடபழடடய பெருந்தோட்ட நிறுவனம், பெருந்தோட்டத் துறையில் உள்ளூர் மற்றும் உலகளாவிய பங்குதாரர்களை ஒன்றிணைத்த செய்தியாளர் மாநாட்டில், உலகில் முதன்முதலாக மூன்று மகுடத்துடன் ஒரு வரலாற்று சாதனைப் படைத்ததை பெருமையுடன் அறிவித்தது.

இலங்கையின் முன்னேறிய தொழில் துறை நிபுணர்கள், சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் உள்ளிட்ட கௌரவமிக்க பிரமுகர்கள் கலந்து கொண்ட கிங்ஸ்பரி ஹோட்டலில் நடத்தப்பட்ட விசேட நிகழ்வின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதில் ர்யலடநலள குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹான் பண்டித்தகேஇ நெதர்லாந்து தூதுவர் மேன்மைப் பொருந்திய Bonnie u;orbach, இலங்கைக்கான நெதர்லாந்து இராச்சிய தூதரகத்தின் சிரேஷ்ட கொள்கை ஆலோசகர்-விவசாயம், நிஷான் திஸாநாயக்க, ஜப்பான் தூதரகத்தின் துணைத் தலைவர் இலங்கை, கட்சுகி கோட்டாரோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் ஆசிய பிராந்தியத்திற்கான கட்டுப்பாட்டுப் பிரிவின் தலைவர் மற்றும் சபை உறுப்பினர் Dirk Teichert, கட்டுப்பாட்டுப் பிரிவின் முகாமைத்துவப் பணிப்பாளர் - இலங்கை மற்றும் மியன்மார் ரொஷான் ரணவக்கஇ சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தின் (IUCN) இலங்கை பிரதிநிதி கலாநிதி ஷாமென் விதானகே, IUCN அதிகாரிகள்இ சிரேஷ்ட கல்வியாளர்கள், தேயிலை மற்றும் விவசாய துறைகளின் அதிகாரிகள் மற்றும் u;ayleys குழுமம் முழுவதும் உள்ள ஏனைய முக்கிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# வெசாக் பரிசாக சுத்தமான குடிநீர்



AIA இன்சூரன்ஸ் பெருநிறுவன வர்த்தக நாமப் பிரிவினுள் வகைப்படுத்தப்பட்டுள்ள இலங்கையில் மிகவும் போற்றப்படும் மற்றும் விரும்பப்படும் காப்புறுதி வழங்குநராகத் திகழ்வதோடு, இந்த வெசாக் பண்டிகையின் போது அநுராதபுரத்தின் கிம்பல்பதியாவ கிராம மக்களுக்கு மிகவும் சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீரை அவர்களின் வாழ்நாளில் கிடைக்கப் பெரும் மிகவும் சிறந்த பரிசாக அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் வழங்கியிருந்தது.

சுத்தமான குடிநீர் என்பது வாழ்க்கையின் மிகவும் முக்கியமான மற்றும் மனிதனின் அடிப்படைத் தேவைகளில் மிகவும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து AIA இன்சூரன்ஸ் இக்கிராமப்புறச் சமூகத்தில் நீர் சுத்திகரிப்பு முறையினைச் செயல்படுத்தியிருந்தது.

இந்த குறிப்பிடத்தக்க முன்முயற்சியானது அனைத்து இலங்கையர்களும் ஆரோக்கியமான, நீண்ட ஆயுளுடன், மிகச் சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்கு உதவும் AIA இன் நீடித்த அர்ப்பணிப்பின் ஒரு சான்றாகும்.

நீர் என்பது இயற்கை வளம் என்பதை விட இது ஆரோக்கியம், நல்வாழ்வு மற்றும் செழுமை ஆகியவற்றின் இன்றியமையாத அத்திவாரமாகும். 75 மாணவர்கள் கல்வி கற்கும் ஆரம்பப் பாடசாலை உட்பட கிட்டத்தட்ட 1500 நபர்களை உள்ளடக்கிய 300 குடும்பங்கள் வசிக்கும் கிம்பல்பதியாவ கிராமத்தில் சுத்தமான குடிநீரைப் பெறுவது என்பது நீண்ட காலமாக அம்மக்களினால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கனவாகவே இருந்து வந்தது.

# சிறந்தநிதி வருவாயை கொண்டுள்ள Softlogic Capital



SoftLogic Life, SoftLogic Finance, SoftLogic Stockbrokers மற்றும் SoftLogic Asset Management (SoftLogic Invest) ஆகிய நிறுவனங்களின் நிதிச் சேவைப் பிரிவான Softlogic Capital, மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த நிதியாண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்ய முடிந்தது.

மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த நிதியாண்டில், Softlogic Capital ஆனது முந்தைய நிதியாண்டை விட 13மூ வளர்ச்சியைப் அடைந்துஇ 36.7 பில்லியன் ரூபாய்களின் ஒருங்கிணைந்த வருவாயைப் பதிவு செய்ய முடிந்தது.

பரிசீலனைக்கு உட்பட்ட காலப்பகுதியில் 168மூ வளர்ச்சியுடன் 431 மில்லியன் ரூபா வரிக்குப் பிந்திய இலாபத்தையும் பதிவு செய்ய முடிந்தது. செயல்பாட்டு இலாபம் ஆண்டுக்கு ஆண்டு (YoY) 36% அதிகரித்து, வரிக்கு முந்தைய இழப்பு நிலையுடன் 11 பில்லியன் ரூபாவாக அமைந்துள்ளது.

கடந்த வருடத்தில் பதிவான 2.3 பில்லியன் ரூபா நட்டத்துடன் ஒப்பிடுகையில், 66 மில்லியன் ரூபா என குறிப்பிடலாம். இதனுடன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட செயல்பாட்டு இலாப வரம்பு 29% ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 400 அடிப்படைப் புள்ளிகள் அதிகரிப்பதாகக் குறிப்பிடலாம்.

மார்ச் 31 இல் முடிவடைந்த மதிப்பாய்வின் கடைசி காலப்பகுதியில் மொத்த வருவாய் 12% வளர்ச்சியுடன் 9.2 பில்லியன் ரூபாவாகும்.

வரிக்கு முந்தைய இலாபம் 763 மில்லியன் ரூபாவாக இருந்தது, இது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 150% வளர்ச்சியாகும். இதன் மொத்த சொத்து மதிப்பு 69 பில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

# நிர்மாண மின்சக்தி மற்றும் வலு கண்காட்சி 2024 க்கு அனுசரணை




E. B. Creasy & Co. PLC இன் புதுப்பிக்கத்தக்க வலுப் பிரிவான E.B. Creasy Solar, இலங்கையின் உள்ளக தயாரிப்புகள்இ நிர்மாணம், மின் மற்றும் வலுத்துறைக்கான முன்னணி நிகழ்வான முன்னெடுக்கப்படும் நிர்மாண மின்சக்தி மற்றும் வலு கண்காட்சி 2024 நிகழ்வுக்கு பிளாட்டினம் அனுசரணை வழங்கவுள்ளது.

நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட கால செயற்பாட்டாளராக அமைந்துள்ள E. B. Creasy Solar, தொடர்ச்சியான 9 ஆவது வருடமாக மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியை தோற்றுவித்துள்ளது.

2024 ஜுலை 5 முதல் 7 வரை கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறும். தொழிற்துறைசார் நிபுணர்களுக்கு நவீன போக்குகள், தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான முக்கியத்துவம் வாய்ந்த கட்டமைப்பாக அமைந்துள்ளது.

Lanka Exhibition and Conference Services (LECS)இனால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்கு அனுசரணை வழங்குவதனூடாக, இலங்கையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வதற்கான தனது ஒப்பற்ற அர்ப்பணிப்பை E. B. Creasy Solar வெளிப்படுத்தியுள்ளது.

இருபது வருடங்களுக்கு மேலாக சூரிய வலுத்துறையில் ஆழமான அனுபவத்தைக் கொண்டிருக்கும் E. B. Creasy Solar, ஒவ்வொரு செயற்திட்டமும் நுணுக்கமாகவும், அர்ப்பணிப்புடனும் முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்கின்றது.

# Leader Conference 2024 அறிமுகம்




யூனியன் அஷ்யூரன்ஸ் தனது அறிமுக Leader Conference 2024 நிகழ்வை குருநாகல், Epitome ஹோட்டலில் முன்னெடுத்திருந்தது. இதில் 250 க்கும் அதிகமான பங்குபற்றுனர்கள் பங்கேற்றிருந்ததுடன், அதில் யூனியன் அஷ்யூரன்ஸ் கிளை வலையமைப்பைச் சேர்ந்த முகவர் தலைமைத்துவ மற்றும் விற்பனை தலைவர்கள் பலரும் அடங்கியிருந்தனர்.

தலைமைத்துவ விருத்தி மற்றும் சிறப்பு ஆகியவற்றுக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பின் மற்றுமொரு மைல்கல்லாக இது அமைந்திருந்தது.

Leader Conference இனூடாக சிறப்பாக செயலாற்றும் தலைவர்களின் சாதனைகளை கௌரவிக்க எதிர்பார்க்கப்படுவதுடன்இ அவர்களுக்கு பரிபூரண பயிற்சி மற்றும் விருத்திக்கான வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதையும் இலக்காக கொண்டுள்ளது.

பயிற்சிகளை வழங்குவதில் நிபுணரான நாலக ஹேவாமத்தும அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட அமர்வு நிகழ்வில் அதிகளவு முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது.

தலைமைத்துவ திறன்களை மேம்படுத்திக் கொள்வது தொடர்பில் தாம் கொண்டுள்ள ஆழமான அறிவை இவர் பகிர்ந்து கொண்டார்.

தலைமைத்துவம் வகிப்போருக்கு தமது செயற்பாட்டு வினைத்திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும்இ உயர்ந்த சாதனைகளை எய்தவும் செயலாற்றக்கூடிய தந்திரோபாயங்களை இவரின் பயிற்சி வழங்கியிருந்தது.




# Slingshot Accelerator இரண்டாம் திட்டம்

ஹேமாஸ், u;atch உடன் இணைந்து u;emas x u;atch Slingshot திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

2023 ஆம் ஆண்டில் முன்னெடுத்திருந்த Accelerator திட்டத்தின் வெற்றிகரமான பூர்த்தியைத் தொடர்ந்து, வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள், சுகாதாரப் பராமரிப்பு போன்ற துறைகளைச் சேர்ந்த 25 ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு Slingshot 2.0 ஊடாக ஆதரவளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

முதற் கட்டத்தின் போது கல்வி மற்றும் கல்வித் தொழில்நுட்பம், வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள், சுகாதார பராமரிப்பு மற்றும் சரக்குக் கையாளல் போன்ற துறைகளைச் சேர்ந்த 25 ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கும், 8 ஆரம்பநிலை நிறுவனங்களுக்கு accelerated ஆதரவையும் வழங்கியிருந்தது.

இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு புத்தாக்கம் மற்றும் பங்களிப்பை ஊக்குவித்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது. நீண்ட வரலாற்றைக் கொண்ட பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஹேமாஸ் குழுமம்இ வியாபார சூழலில் வெற்றிகரமாக செயலாற்றுவதற்கு புத்தாக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது.

# SEUSL மாணவர்களுக்கு தொழிற்துறை பயிற்சி





அமானா வங்கி, இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்துடன் (ளுநுருளுடு) கைகோர்த்து, விசேட தொழிற்துறை பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பட்டம் பயிலும் மாணவர்களுக்கு தொழிற்துறைக்கு தயார்ப்படுத்துவதற்கு அவசியமான திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கான வசதியை ஏற்படுத்தியிருந்தது.

வங்கியின் அறிவு சந்தைப்படுத்தல் மற்றும் நிதிசார் உள்ளடக்க அலகினால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வட்டிசாராத வங்கியியல் முறைமையைக் கொண்ட வங்கி மற்றும் நிதியியல் துறையில் திறன் படைத்த பணியாளர் குழுவை கட்டியெழுப்ப எதிர்பார்ப்பதுடன், உள்நாட்டு தொழிற்துறையில் திறன் கட்டியெழுப்பலுக்கான தற்போதையை தேவையை நிவர்த்தி செய்வதிலும் கவனம் செலுத்துகின்றது.

மாணவர்களுக்கு பிரயோகச் செயற்பாடுகள் பற்றி பயிலவும், கல்விச் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக இடைக்கால பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கும் உதவும் வகையில் இந்தத் திட்டம் அமைந்திருந்தது.

அமானா வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்ற அறிமுக பயிற்சி நிகழ்வில் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் குழுவினர்கள் பங்கேற்றிருந்தனர். இதன் போது வங்கிச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரிடமிருந்து நேரடியாக விடயங்களை பயில்வதற்கு இவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருந்ததுடன், பல்வேறு சிந்தனைகளைத் தூண்டும் அமர்வுகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பும் கிடைத்திருந்தது.




# வத்தளை Pegasus Reef கடற்கரையை அலங்கரிக்கவுள்ள Battle of the Reef




மிகவும் எதிர்பார்க்கப்பட்ட 'Battle of the Reef' திருவிழா எதிர்வரும் ஜுலை மாதம் Pegasus Reef ஹோட்டல் கடற்கரையில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வானது, இலங்கையில் உள்ள நிறுவன பங்கேற்பாளர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட விளையாட்டுகள், நட்புறவு, பொழுதுபோக்கு உள்ளிட்ட மகிழ்ச்சியூட்டும் கொண்டாட்ட நிகழ்வுகளை உறுதியளிக்கிறது.

ஜுலை 27 ஆம் திகதி, Pegasus Reef ஹோட்டலின் அழகிய கடற்கரையானது விழாக் கோலம் பூண்டு, உற்சாகத்துடனும், நட்பு ரீதியான போட்டிகளின் ஆரவாரத்துடன் உயிர் பெறவுள்ளது. இலங்கையில் உள்ள பெரு நிறுவனங்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பீச் வொலிபால், Tag Rugby, கயிறு இழுத்தல் உள்ளிட்ட போட்டிகளும் வேடிக்கை நிறைந்த பல்வேறு செயற்பாடுகளும் இதில் உள்ளடங்குகின்றன.

Pegasus Reef நிறுவனத்தின் பொது முகாமையாளர் ரேணுகே கொஸ்வத்த இது தொடர்பில் குறிப்பிடுகையில், "விளையாட்டுகள் மற்றும் இசை நிறைந்த கொண்டாட்டமான 'Battle of the Reef' விழாவை, Pegasus Reef ஹோட்டலில் நடாத்துவதில் நாம் பெருமிதம் அடைகிறோம். இது இலங்கையில் இடம்பெறும் இவ்வாறான "முதலாவது" நிகழ்வாகும். இந்த நிகழ்வின் முக்கிய விடயமாக வேடிக்கை விநோத அம்சங்கள் அமைந்திருக்கும்." என்றார்.

# இணையவழி CRIB அறிக்கைகளுக்கான அணுகலை வழங்கும் மக்கள் வங்கி

வாடிக்கையாளர்கள் தமது தனிப்பட்ட கடன் அறிக்கைகள் ((ஆலசுநிழசவ) மற்றும் கடன் தரப்படுத்தல் புள்ளி (ஊசுஐடீ ளுஉழசந) தொடர்பில் அறிந்துகொள்வதற்காக பதிவுசெய்து, கோரிக்கை விடுப்பதற்கான, சிரமங்களற்ற மற்றும் திறன்மிக்க வழிமுறையை அறிமுகப்படுத்தும் வகையில் கடன் தகவல் பணியகத்துடன் ((ஊசநனவை

ஐகெழசஅயவழைெ டீரசநயர – ஊசுஐடீ) ஏற்படுத்தப்பட்டுள்ள புதுமையான கூட்டாண்மை தொடர்பில் மக்கள் வங்கி பெருமையுடன் அறிவித்துள்ளது.

தனிநபர் ஒருவரோ அல்லது நிறுவனம் ஒன்றோ கடனொன்றுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்பதாக தமது கடன் தரப்படுத்தல் தொடர்பில் சிறப்பாக விளங்கிக் கொள்வதற்கு "'ஆலசுநிழசவ'" மிகவும் முக்கியமானது. இந்த அத்தியாவசியமான மற்றும் புத்தாக்கமான சேவை தற்போது'நழிடந"ளீயல' றயடடநவ யீி மூலம் தங்குதடையின்றி ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையில் முக்கியமான முறைசார் வங்கியொன்றால் இந்த வகையில் முதன்முறையாக வழங்கப்படும் சேவையாக மாறியுள்ளது.

இன்றைய வேகமான டிஜிட்டல் யுகத்தில், தனது வாடிக்கையாளர்களின் பரிமாண மாற்றம் கண்டு வருகின்ற தேவைகளை நிவர்த்தி செய்யும் முயற்சிகளை மக்கள் வங்கி தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

வாடிக்கையாளர்கள் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருந்தும் கூட, தாம் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே முக்கியமான நிதியியல் தகவல் விபரங்களை அணுகுவதற்கு எமது வாடிக்கையாளர்களுக்கு வாய்ப்பளிப்பதை உறுதி செய்து, மகத்தான டிஜிட்டல் வங்கிச்சேவை அனுபவங்களை வழங்குவதில் வங்கி கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கு இந்த சமீபத்தைய முயற்சி சிறந்ததொரு சான்றாகும்.

# Siemens Healthineers Symbia Evo Excel Gamma Camera சாதனம் நிறுவல்




இலங்கையின் முன்னணியில் உள்ள பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான DIMO நிறுவனத்தின் சுகாதாரப் பிரிவும், இலங்கையில் Simens Healthineers ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனமுமான DIMO Healthcare, நாட்டின் முன்னணி மருத்துவமனைகளில் ஒன்றான Lanka Hospitals இன் தொழில்நுட்ப திறன்களை மேலும் மேம்படுத்தும் வகையில், மிக உயர்ந்த தரத்துடன் நோயறிதலை மேற்கொள்ள உதவும், அதிநவீன Siemens Healthineers Symbia Evo Excel Gamma Camera சாதனத்தை நிறுவியுள்ளது.

Lanka Hospitals இல் நிறுவப்பட்டுள்ள சமீபத்திய Siemens Healthineers Symbia Evo Excel Gamma Camera உபகரண தொகுதியானது, புற்றுநோய் உள்ளிட்ட, மருத்துவ விஞ்ஞானத்தில் சிக்கலான பல்வேறு நோய்களை துல்லியமாக கண்டறிவதிலும், சில புற்றுநோய் மருத்துவ சிகிச்சைகளின் முடிவுகளை வழங்குவதிலும் தனித்துவமான பங்கை வகிக்கிறது.

அத்துடன், சிறுநீரகம், நுரையீரல், இதயம், நரம்புகள், உடலின் பல்வேறு உறுப்புகள் தொடர்பான பல்வேறு நோய்களை துல்லியமாக கண்டறிய இந்த இரட்டை உணரல் Gamma கெமரா சிறப்பாக பங்காற்றுகிறது.

Gamma கெமராவில் உள்ள மேம்பட்ட Symbia Evo Excel தொழில்நுட்பமானது, வேகமாகவும் உயர்தரமானதுமான படங்களையும் எடுக்க உதவுகிறது. இது சிறிய தொற்றுநோய்களைக் கூட எளிதாகக் கண்டறிய உதவுவதோடு, ஆரம்பநிலை நோயறிதல் மற்றும் சிகிச்சை தொடர்பான முடிவுகளை எடுக்க மிகவும் உதவியாக உள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த Lanka Hospitals அணு மருத்துவ நிபுணர் சந்திரகுப்த உடுகம, "நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், மருத்துவமனையின் வசதிகளை மேம்படுத்துவதற்கும்,

சிறந்த நோயாளர் பராமரிப்பை வழங்குவதற்கும், உள்நாட்டு சுகாதார கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் Lanka Hospitals வழங்கும் பங்களிப்பை இது மேலும் வலுப்படுத்தும்.

அந்த வகையில், நோயாளிகளுக்கு ஒப்பிட முடியாத பராமரிப்பை வழங்குவது தொடர்பிலான எமது பயணத்தை ஆதரிக்கும் சரியான பங்காளியாக, மருத்துவப் பொறியியலில் நிபுணத்துவம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப அணுகுமுறைகள் கொண்ட DIMO Healthcare நிறுவனத்தை நாம் அடையாளம் கண்டுள்ளோம்." என்றார்.



# வரிவிதிப்பு தொடர்பான கலந்துரையாடல்

இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (ருனுேீ) ஆனதுஇ நிதியமைச்சுஇ உள்நாட்டு இறைவரித் திணைக்களம்இ மொரட்டுவை பல்கலைக்கழகம்இ இலங்கையின் தேசிய புத்தாக்க முகவர் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்துஇ நாட்டில் காணப்படும் வரிவிதிப்பு மற்றும் நிதிக் கொள்கைகள் தொடர்பில் காணப்படும் சமகாலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குஇ தேசிய வரி தொடர்பான கலந்ரையாடலுக்கான முதலாவது கூட்டத்தை நடாத்தியிருந்தது.

இந்த ஆரம்ப நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கஇ இலங்கைக்கான ருனுேீ இன் வதிவிடப் பிரதிநிதி யுணரளய முரடிழவய ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

தற்போதைய பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்களின் எண்ணங்களை வெளிக் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தின் அடிப்படையில் இந்த தேசிய கலந்துரையாடல் அமைந்திருந்தது.

வரியின் நோக்கம்இ சமூக அல்லது நிதி தொடர்பான ஒப்பந்தம்இ வரி விதிப்பில் நேர்மைத் தன்மைஇ வெளிப்படைத்தன்மை மற்றும் வருமானம் தொடர்பில் நிறுவனங்களின் பொறுப்புக்கூறல்இ அரச சேவையை டிஜிட்டல் மயமாக்குதல் ஆகியன தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் ருனுேீ இணைந்து முதன் முறை முன்னெடுத்த இலங்கையில் "வரி செலுத்துவோரின் எண்ணம் தொடர்பான ஆய்வு" இல் கண்டறிந்த கண்டுபிடிப்புகள் இந்த கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டது.